திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 22.02.2026

# படகோட்டியிடம் பாடம் படிப்போம்..!

இராமபிரானை உலகமே அறியும் எனும்படி அவர் மகிமை, பெருமை எங்கும் பரவி இருந்தது.

இராமர் காட்டிற்குப் போக உத்தரவு. சீதையும் இலட்சுமணனும் அவருடன் சென்றார்கள். கங்கை நதியைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் முதன் முதலாக குகன் இராமரைப் பார்க்கிறான். இராமரைப் பற்றி சகல விஷயங்களும் குகனுக்கு தெரியும். நாட்டை விட்டு வந்து தன்முன் நிற்கும் இராமரைக் காண முடியாமல் குகனின் கண்களில் கண்ணீர் திரை.

“என்னால் உனக்கு என்ன உதவி செய்ய முடியும் இராமா” என்று பக்தியோடு கேட்கிறான் குகன்.

“கங்கை நதியைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டும் குகா” என்று இராமன் சொல்ல

அப்போது ஒரு படகு யாரையோ இறக்கிவிட்டு புறப்படத் தயாராகியது.

“கேவத்” என்பவன்தான் அந்தப் படகின் உரிமையாளர். குகன் அவனை நோக்கி, “ கேவத் உன் படகை இங்கே கொண்டு வா” என்று சொல்ல படகு இவர்களை நெருங்கி வருகிறது.

“கேவத் இவர்கள் யார் என்று தெரியுமா?” என்று கேட்ட குகன். “ கேவத் சொல்லும் பதிலுக்காகக் காத்து நிற்காமல் உடனே சொன்னான், “இவர்தான் அயோத்தியின் மகாராஜா ஸ்ரீ ராமர். இவர் இராணி சீதாதேவி. இவர் இலட்சுமணன், அவருடைய வீர சகோதரர். இவர்களை அக்கரைக்குக் கொண்டு சேர் ” என்று குகன் சொல்ல..

கேவத் அவர்களை வணங்குகிறான்.
கேவத் தினமும் காலையில் எழுந்திருக்கும் போதும், இரவில் படுக்கும் போதும் இராம நாமம் சொல்பவன்.
“ஐயா குகனே நான் இவர்களை கங்கையின் மறுக்கரைக்குக் கொண்டு சேர்க்கிறேன்.

ஆனால், முதலில் இராமரின் கால்களை நன்றாகக் கழுவி விட வேண்டுமே.. தூசு.. துரும்பு இருக்கக் கூடாது “ என்று சொல்கிறான் கேவத்.

குகன் காரணம் கேட்க,

கேவத் அங்குள்ள அனைவரையும் வணங்கி, “மகாராஜா.. நான் ஒரு ஏழை படகோட்டி. இந்த பழைய, சிறிய படகுதான் எனக்கு வாழ்வாதாரம். என்னிடம் வேறு படகு கிடையாது. இன்னொன்று வாங்க வசதியும் இல்லை ” என்றான்.

“ஏனப்பா இப்படி எல்லாம் பேசுகிறாய்?” என்று இராமர் கேட்க..

“எனக்கு உங்களைப் பற்றி தெரியும் ஐயா. உங்கள் கால்களில் உள்ள தூசு பட்டால் போதும், கல்லும் கூட பெண்ணாகும். அப்படி உங்கள் கால் தூசு பட்டு என் படகும்

பெண்ணானால், என் படகு காணாமல் போய்விடுமே. அதனால்தான், நீங்கள் என் படகில் கால் வைக்கும் முன்பே உங்கள் கால்களைத் தூசு இல்லாமல் கழுவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். என் படகையும், என்னையும் நீங்கள்தான் காத்தருள வேண்டும் " என்று சொல்லி முடித்தான் கேவத்.

இராமரும் மற்றவர்களும் புன்னகை பூக்க, " கேவத் மிகுந்த பக்தியோடு கங்கை நீரால் இராமரின் பாதங்களைக் கழுவி, ஆசி பெற்று.. அவர்களை மறுகரைக்குப் படகில் அழைத்துச் சென்று இறக்கி விடுகிறான்.

அனைவரும் படகை விட்டு இறங்கிய பிறகு, அன்னை சீதாதேவி மனநிறைவோடு தனது மோதிரம் ஒன்றைக் கழற்றி இராமரிடம் கொடுத்து "இதை அவருக்குப் பரிசாகக் கொடுங்கள்" என்கிறார்.

"அம்மா தங்களுக்கும் ஸ்ரீராமருக்கும் சேவை செய்ய நான் பரிசு வாங்கினால், என் புண்ணியம் குறைந்து விடும்" என்று சொல்லி பணிவோடு பரிசை ஏற்க மறுக்கிறான் கேவத்.

"ஓ. அப்படியா.. கேவத், நீ இதை பரிசாக ஏற்க வேண்டாம். படகில் ஏற்றி வந்ததற்குக் கூலியாக ஏற்றுக் கொள்" என்று சொல்லி சிரித்துக் கொண்டே இராமர் மோதிரத்தை நீட்ட,

"பகவானே ஒருவேளை நான் பரிசாகவாவது ஏற்றுக் கொண்டிருப்பேன். நிச்சயம் கூலியாக வாங்க மாட்டேன்" என்று சொல்கிறான் கேவத்.

"நீ பேசுவது வினோதமாக இருக்கிறதே. ஏன் என்னிடம் கூலி வாங்க மாட்டாய்? " என்று இராமர் கேட்க

"தொழில் விசுவாசம் ஐயா" என்றான் கேவத்.

"கொஞ்சம் புரியும் படியாகச் சொல்லேன்" என்று இராமர் வியப்போடு கேட்க.

"ஒரு படகோட்டி, இன்னொரு படகோட்டியிடம் கூலி வாங்க மாட்டான்" என்று கேவத் சொல்ல.
"புரியவில்லையே" என்றார் இராமர்.

"தங்களுக்கா புரியாது.... என்னை சோதிக்கிறீர்கள். நாம் இருவருமே படகோட்டிகள்தான். நான் ஒரு கரையில் இருந்து ஆற்று நீரைக் கடந்து மறுகரைக்குச் செல்ல உதவும் படகோட்டி.

நீங்கள் எல்லோரையும் ஜனன, மரண துன்பங்களிலிருந்து கரை சேர்க்கும் தாரக இராமர்.
நாம் இருவரும் படகோட்டிகள் தானே.
நான் சின்ன படகோட்டி.... நீங்கள் மிகப்பெரிய படகோட்டி.... தொழில் ஒன்றுதானே. பகவானே.. என்னையும் ஒருநாள் இந்தப் பிறவி பெருங்கடலை கடக்க நல்லருள் புரிந்து, தங்கள் கணக்கை நேர் செய்து கொள்ளுங்கள் " என்று சொல்லி இராமரின் கால்களில் விழுந்து வணங்குகிறான் கேவத்.

அவனை ஆசீர்வதித்து தன் மார்போடு அணைத்துக் கொண்டார் இராமர்.

*மிகப்பெரிய தன்வந்தனாகவும், வள்ளலாகவும் விளங்கும் இறைவனிடம் பொன்னையும்.. பொருளையுமா எதிர்பார்ப்பது.*
*நமது துன்பங்களை போக்கி, மாய உலகத்தை நீக்கி தன் திருவருளைத் தர காத்திருக்கிறார் இறைவன்.. என்று நமக்குச் சொல்லிக் கொடுக்கும் ஒரு ஏழை படகோட்டியிடம் பாடம் படிப்போம்.*